**தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 07 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 100.62 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 91.78 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 8.84 மில்லியன் அதாவது 8.79 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 78.68 | 78.63 | 0.05 | 0.06 |
| மூலதனம் | 21.94 | 13.15 | 8.79 | 40.06 |
| மொத்தம் | **100.62** | **91.78** | **8.84** | **8.79** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 28001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 3.81 | 3.07 | 2.71 | 3.46 | 18.00 | 13.07 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்பு

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

2013 யூலை மாதத்திலிருந்து 2015 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் திணைக்களத்தினால் வெளிநாட்டு நிதியீட்டங்களின் கீழ் தந்திரோபாய நிலைய செயற்திட்டம் (SPoDPMM) செயற்படுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் அதன் திருத்திய மதிப்பீட்டு கிரயத்தின் கூட்டுத்தொகை ஐ.அ.டொலர் 160,164 ஆக இருந்ததுடன் அச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை ஐ.அ.டொலர் 72,422

பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பிட்டு இயலளவினை பலப்படுத்தவதற்காக ஒன்றிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமையை (INDIS) நவீனமயப்படுத்தல் மற்றும் பலப்படுத்துவதற்காக இச் செயற்திட்டத்தின் மூலம் ஐ.அ.டொலர் 94,500 மானியம் 2013 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டக் காலம் முடிவடையும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ஐ.அ.டொலர் 23,178 அதாவது 24.5 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. முறைமையை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப முகவராண்மையின் (ICTA) சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதி அளவிலும் அம் முறைமையின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் செயற்திட்ட மதிப்பீடு மற்றும் மேற்பார்வை செய்யும் இயலளவை மேம்படுத்துவதற்காக செயற்திட்ட பணத்தில் 12 உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டுப் பயிற்சிக்காக ரூபா 975,475 தொகை 2014 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. அதில் 8 உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு பயிற்சியளித்தலுக்காக ரூபா 788,975 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது இந்த உத்தியோகத்தர்களிற்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன.

எதிர்காலத்தில் திணைக்களத்தினால் எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு போதியளவான செலவினங்களை செய்து பயிற்சியளிக்கப்பட்டால் பயிற்சியின் பின்னர் உத்தியோகத்தர்களால் திணைக்களத்திற்கு குறைந்தது சேவை செய்யக்கூடிய வருடங்களின் எண்ணிக்கையை தீர்மானித்து நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையை பெற்றுக்கொண்டு அந்த உத்தியோகத்தர்களுடன் உடன்படிக்கையொன்றுக்கு உட்பட நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

## 3.2 செயலாற்றல்

---------------------

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

வெளிக்களச் சுற்றுலா மூலம் செயற்திட்டத்தை மேற்பார்வை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட 1051 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்களில் 13 செயற்திட்டங்களுக்கு மாத்திரம் வெளிக்கள பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்கள் நாட்டின் அனைத்து மாகாணங்களையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது 4 மாவட்ட செயலகங்களில் மாத்திரம் செயற்திட்ட புலனாய்வு சுற்றுலா இடம்பெற்றிருந்தது.

ஆண்டினுடன் செயற்படுத்தப்பட்ட சகல செயற்திட்டங்களுக்கான வெளிக்கள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், செயன்முன்னேற்ற மீளாய்வின் போது பிரச்சினைகள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் எதிர்பார்த்த இலக்கில் செயன்முன்னேற்றம் அடைய பெறாத செயற்திட்டங்களுக்காக மாத்திரம் வெளிக்கள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மொத்தம் 93 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் கூடிய இத் திணைக்களத்திற்காக இலங்கை மத்திய வங்கி கட்டிடத்தில் 10,707.4 சதுர அடியுடன் கூடிய 02 மாடிகள் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அதற்காக ஒரு சதுர அடிக்கு ரூபா 200 வீதம் 2015 ஆம் ஆண்டில் வாடகையாக ரூபா 25,697,760 செலுத்தப்பட்டிருந்தது. அது 2015 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினத்திற்காக செலவிடப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 78,680,185 அளவில் 33 சதவீத்தை பிரதி நிதித்துவப்படுத்தியமை அவதானிக்கப்பட்டது.

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 29 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 35 | 23 | 12 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 18 | 02 |
| | மொத்தம் | 93 | 71 | 22 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தினால் நியமன அதிகாரியின் அங்கீகாரமின்றி முறையற்ற விதத்தில் அபிவருத்தி உத்தியோகத்தரொருவர் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த உத்தியோகத்தருக்காக 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 576,774 சம்பளம் மற்றும் படிகள் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.